மாலை முரசு

பக்கங்கள் 17

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 கார்த்திகை 15 சனிக்கிழமை 02.12.2023 அதிர்வு 124

## வெட்கமே இல்லையா?

### நீதி அமைச்சரைத் தாக்கிய சுமந்திரன்



(ந.லோகதயாளன்)

நீதியே இல்லாத நாட்டில் நீதி அமைச்சராக இருப்பதற்கு வெட்கமில்லையா என நீதி அமைச்சரைப் பார்த்து 04

# ஊடக அடக்குமுறைகளுக்கு எதிராக கிளர்ந்தெழுந்த ஊடகவியலாளர்கள்

### வவுனியாவில் ஆர்ப்பாட்டம்; பல்வேறு தரப்பினரும் ஆதரவு




- கி.வசந்தரூபன் -

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வேண்டியும், ஊடக அடக்குமுறைகளுக்கு எதிராகவும் வவுனியாவில் இன்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப் பட்டது.

வவுனியா ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக இந்தப் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த ஊடகவியலாளர்கள்,

“இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வருகின்ற தரப்புக்கள் தமிழ் ஊடகங்களை அடக்கியாள நினைப்பது 04



## மன்னாரைச் சேர்ந்த மேலும் ஏழு பேர் தமிழகத்தில் தஞ்சம்




04

### சபையில் சால்வை அணிந்து

## பலஸ்தீனத்துக்கு ஆதரவை வெளியிட்ட ஹக்கீம் எம்.பி.

### அமெரிக்கத் தூதுவர் மீதும் பாய்ச்சல்

(கே.ஏ.ஹமீட்)



இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் கண்டிக்கும் அமெரிக்கத் தூதுவர், இஸ்ரேலில் நடக்கும் அநியாயத்தைக் கவனிக்க வேண்டும் என்று 04

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடன் நிறுத்துங்கள்

### ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்து

இலங்கையில் கைது செய்யும் நடவடிக்கைகளுக்காகத் தொடர்ந்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்துவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் கவலை வெளியிட்டுள்ளது.

சர்வதேச தர நிலைகள் மற்றும் மனித உரிமைகள் மரபுகளுக்கு ஏற்ப சட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்றும், இதற்கிடையில் உறுதி மொழிகளின்படி பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.



உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைதான இளைஞன் தொடர்பில் டக்ளஸ் கவனம்!

## பெற்றோர் அமைச்சரைச் சந்தித்து உதவி கோரல்



தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புடன் தொடர்புபட்ட ஆடை அணிந்திருந்தமையால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள இளைஞனின் விடுதலை தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கவனம் செலுத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டுள்ள இளைஞனின் பெற்றோர் நேற்று (01)அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து மகனின் விடுதலை தொடர்பில் கவனம் செலுத்துமாறு உதவி கோரியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து உரிய தரப்புக்களுடன் கலந்துரையாடிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அவர்களுக்கு நிலைமை தொடர்பில் விளக்கமளித்துள்ளார். தேவையற்ற பண விரயங்களை செய்யாமல் பொறுமையாக இருக்குமாறும் ஆறுதல் தெரிவித்துள்ளார்.

கடந்த 27 ஆம் திகதி மாவீரர் நாள் நினைவேந்தல் ஏற்பாடு செய்யப்பட்ட நிலையில், கொடிகாமம் பிரதேசத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வுக்கு அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த யூட் சுரேஸ்குமார் டனுஜன் (வயது - 23) என்ற இளைஞன் சென்றுள்ளார்.

இதன்போது அந்த இளைஞன் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவரின் புகைப்படம் மற்றும் சின்னம் ஆகியவை பொறிக்கப்பட்ட ரீசேர்ட் அணிந்து சென்றுள்ளார்.

இதனடிப்படையில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள அந்த இளைஞன், நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு எதிர்வரும் 12 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# பேனா வடிவான துப்பாக்கி; வைத்திருந்தவர் கைதானார்!



யக்கலவில் பேனா வடிவிலான சிறிய துப்பாக்கியை வைத்திருந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் துப்பாக்கியின் உரிமையாளரும் பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டுபிடிக்கப்பட்ட துப்பாக்கி 09 மில்லி மீற்றர் தோட்டாக்களை சுடும் திறன் கொண்ட வெளிநாட்டில் தயாரிக்கப்பட்டது என்று அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர்.

நேற்று கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 29 மற்றும் 33 வயதுடைய கம்பஹா, யக்கல பிரதேசத்தை சேர்ந்தவர்களாவர்.

சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக யக்கல பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# 2 லட்சத்து 9 ஆயிரத்து 761 மாணவர்கள் இந்த முறை உயர்தரம் கற்பதற்குத் தகுதி!

2022 - 2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைப்பெறுபேறுகள்வெளியாகியுள்ள நிலையில் 2 லட்சத்து 9 ஆயிரத்து 761 மாணவர்கள் உயர்தரத்திற்கு தகுதி பெற்றுள்ளனர் என்று இலங்கை பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இம்முறை மாணவர்கள் 72.07 சதவீத சித்தியை பெற்றுள்ளதுடன், இவ்வருடம் 13 ஆயிரத்து 588 மாணவர்கள் 9 ஏ சித்தியை பெற்றுள்ளனர்.

இதன்படி, டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை மீள் மதிப்பீட்டுக்கான விண்ணப்பங்களை அனுப்பலாம் எனவும் அறிவித்துள்ளது.

மேலும், பெறுபேறுகள் தொடர்பில் ஏதேனும் சிக்கல்கள் இருப்பின் 1911 அல்லது பாடசாலை பரீட்சைகள் ஒழுங்கமைப்பு மற்றும் பெறுபேறுகள் கிளை - 0112784208, 0112786616, 0112784537, 0112785922 பாடசாலை பரீட்சை மதிப்பீட்டு கிளை - 0112785231, 0112785216, 0112784037 ஆகிய எண்களுடன் தொடர்பு கொள்ளுமாறு பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து உயர்தரம் கற்க தகுதிபெற்றுள்ள மாணவர்களுக்கு கடந்த வருடத்தைப் போன்று, இந்த வருடமும் ஜனாதிபதி நிதியத்தின் புலமைப்பரிசில் வழங்கும் வேலைத் திட்டத்தை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அறிவுறுத்தியுள்ளார்.

இந்த புலமைப் பரிசில் வேலைத் திட்டத்துக்கான விண்ணப்பப் படிவத்தை ஜனாதிபதி செயலகம் presidentsoffice.gov.lk ஜனாதிபதி நிதியம் presidentsfund.gov.lk ஜனாதிபதி ஊடகப் பிரிவு pmd.gov.lk ஆகிய இணையத்தளங்களில் தறவிறக்கம் செய்யலாம்.

அந்த விண்ணப்பங்களை உரிய முறை யில் பூர்த்தி செய்து சாதரண தரம் கற்ற பாடசாலை அதிபர்களிடத்தில் கையளிக்கப்பட வேண்டும்.

இந்த வேலைத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க பாடசாலை மாணவர்கள் மற்றும் அதிபர்களின் ஒத்துழைப்பை ஜனாதிபதி நிதியம் எதிர்பார்க்கிறது.



# ஒரே பாடசாலையைச் சேர்ந்த 15 மாணவர்களுக்குத் தங்கம்

**(கற்பிட்டி - எம்.எச். எம் சியாஜ்)**

கல்வி அமைச்சும் மத்திய சுற்றாடல் அதிகார சபையும் இணைந்து பாடசாலை மாணவர்கள் மத்தியில் ‘சுற்றாடல் எம்மை காக்கும் – நாம் சுற்றாடலை காப்போம்’ என்ற மகுடத்துக்கு அமைய அறிமுகப்படுத்தியுள்ள சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக புத்தளம் மாவட்டத்தில் 2023 ஆம் ஆண்டுக்கான தங்கப் பதக்கம் வென்ற ஒரே ஒரு பாடசாலை கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையாக உள்ளது. இங்கிருந்து பங்கு பற்றிய 15 மாணவர்களும் தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளனர்.

எம்.எச்.எப் ஹனா இம்ன், எம்.ஆர் சேஹா சீனத், எம்.எச்.எப் றுஷ்தா இமா, எம்.எம்.மொஹமட், எம். டி. எம் அபாத், எம்.ஆர். அத்தாஸ் அஹமத், எம்.டி அப்ரத், எம்.எப் ஆனிஷா செய்னப், எம்.எச் ஆயிஷா ஸமா, எம்.எம் அம்மார் றிலா, எம்.எஸ்.எம் அப்ரிஸ், எஸ். கிரிஷாந், எம்.எஸ் ஷாபிக், எம்.எப் செயிட், எஸ்.இதர்ஷனன் ஆகியோரே பதக்கம் வென்றுள்ளனர்.

கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் இந்த சுற்றாடல் குழுவிற்கு பொறுப்பாக ஆசிரியர் எம். ஆர் இர்ஷாத் மற்றும் இவர்களை வழிநடத்திய ஆசிரியை திருமதி ஏ.ஏ இன்ஷிபா ஆகியோரைப் பாடசாலையினர் பாராட்டியுள்ளனர்.

இந்த மாணவர்களைப் பரீட்சிக்கும் பரீட்சார்த்த குழுவில் வலய கல்விப் பணிமனை அதிகாரி, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மாவட்ட பிரதிப் பணிப்பாளர், மாவட்ட ஆலோசகர், வன பரிபாலன திணைக்கள பணிப்பாளர் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர் என்று மாவட்ட சுற்றாடல் முன்னோடி ஆலோசகர் ஏ.எச்.எம்.எம் ஷாபி தெரிவித்தார்.



# மன்னார் மாணவர்களுக்கு புத்தகப்பைகள் வழங்கல்

**(மன்னார் நிருபர்)**

மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்குப் புத்தகப்பை வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இலங்கைக்கான இந்திய தூதர் கோபால் பாக்லே புத்தகப் பைகளை வழங்கி வைத்தார்.



மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஆயிரம் மாணவர்களுக்குப் புத்தகப்பை வழங்கும் நிகழ்வு மன்னார் முருங்கன் தேசிய பாடசாலையில் பிரதி அமைச்சர் காதர் மஸ்தான் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது மன்னார் மற்றும் மடு கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆயிரம் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்ட நிலையில் முதல் கட்டமாக 250 மாணவர்களுக்குப் புத்தகப் பை வழங்கி வைக்கப்பட்டது. இதன் போது இந்திய தூதர் கோபால் பாக்லேவின் சேவையை பாராட்டி பிரதி அமைச்சரால் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக் கப்பட்டார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**பலஸ்தீனத்துக்கு ஆதரவை...**

ஹக்கீம் நாடாளுமன்றத்தில் பேசும் போது தெரிவித்தார்.

வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:-

"பலஸ்தீனத்திற்காக இலங்கை ஆதரவாகச் செயற்பட வேண்டும். இனப் படுகொலை நடக்காது என்று உலகில் கூறப்பட்டாலும் இன்று பலஸ்தீனத்தில் நடப்பதென்ன? அங்கே இனப்படு கொலை அப்பட்டமாக நடக்கின்றது

பலஸ்தீனத்திற்கு எங்களது ஆதர வைத் தெரிவிப்பதற்காக இன்று நாங் கள் இந்தச் சால்வையை அணிந்துள் ளோம். பலஸ்தீனத்தில் போர் நிறுத்தப்பட வேண்டும் என்று இந்த நாடாளுமன்றத் தில் 157 உறுப்பினர்கள் கையொப்ப மிட்ட மகஜர் ஒன்றை ஐ.நா சபைக்கு நாங்கள் அனுப்பினோம். ஆனால், போரை நிரந்தரமாக நிறுத்துவதில் சர்வதேச சமூகம் தோல்வி கண்டுள்ளது. இஸ்ரேல் அப்பட்டமாகவே மனித உரிமை களை மீறுகின்றது. முதியோர்களை, சிறுவர்களை, பெண்களைக் கொல்வ துடன் மனிதநேயப் பணியாளர்கள் என்று ஏராளமானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

இங்கே பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பில் கருத்து வெளியிடும் இலங் கைக்கான அமெரிக்கத் தூதுவர் அங்கே இஸ்ரேலில் அந்தப் படையினர் மேற் கொள்ளும் அட்டூழியங்களையும் கவ னத்தில்கொள்ள வேண்டும். அண் மைய போர் நிறுத்த காலப்பகுதியில் விடுத லையான பலஸ்தீன பணயக் கைதி களின் வீடுகளுக்குச் செல்லும் இஸ்ரே லியப் படையினர் அந்த விடுதலை யை மகிழ்ச்சியுடன் கொண்டாடக்கூடா தென்றும் அச்சுறுத்துகின்றனர்.

சர்வதேச நியமங்களை மீறி சர்வதேச உடன்படிக்கைகளை மீறிச் செய்யப்படும் இந்தப் போர்க்குற்றத்திற்குச் சர்வதேச சமூகம் இடமளிக்கக்கூடாது.

இது இனப்படுகொலை அல்லது போர்க்குற்றம் இல்லையெனில் வேறெ வற்றை நாங்கள் சொல்வது? சர்வதேச சமூகம் இரட்டைவேடத்தைப் போடாமல் நடுநிலையாக இந்த விடயத்தைக் கையாள வேண்டும். இங்கே பலஸ்தீனத்திற்கு ஆதரவளித்து பேசிய டிலான் பெரே ரா எம்.பிக்கும் நான் நன்றியைக் கூறு கின்றேன்." - என்றார்.

**வெட்கமே இல்லையா?....**

நாடாளுமன்றத்தில் வைத்து இலங் கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாள ரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று அவர் உரையாற்றும்போது மேலும் கூறிய தாவது:-

"ஆப்கானிஸ்தான் நாட்டின் கப்பல் போக்குவரத்து அமைச்சரவைப் போன்றே எமது நாட்டின் நீதி அமைச்சர் உள்ளார் என நான் கூறுவது வழக்கம். இம்முறை யாவது அதனைச் சொல்லாமல் விடுவமோ என்று நினைத்தால் கடந்த சில நாட்கள் இந்த நாட்டில் இடம்பெற்றவைகளைப் பார்க்கும்போது நீதியே இல்லாத நாட் டில் ஒரு நீதி அமைச்சர் என்றே எனது பேச்சை ஆரம்பிக்க வேண்டியுள்ளது.

நீதி இல்லாத நாடு எனச் சொல்வ தற்குப் பிரதான காரணம் நாட்டிலே வெவ்வேறு மக்களுக்கு வெவ்வேறு விதமாக சட்டங்கள் பிரயோகிக்கப்படு கின்றமை அப்பட்டமாகத் தெரிகின்றது. இதனைச் சுட்டிக்காட்ட வேண்டிய தேவை இல்லை." - என்றார்.

**ஊடக அடக்குமுறைகளுக்கு...**

வழமையான தொடர்கதையாகவே இருந்து வருகின்றது. குறிப்பாக 2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவுக்கு வரும் வரையில் அதிகாரத் தரப்பின் வன்முறைகளால் 39 ஊடகவியலாளர் களின் இன்னுயிர்களை நாம் இழந் துள்ளோம். அதற்கான நீதி மறுக்கப்பட்ட நிலையில் இன்றும் நீதி கோரி போராடி வருகின்ற தரப்பாக நாம் இருக்கின்றோம்.

இதேவேளை, மாற்றுக் கருத்துக்களை ஒடுக்கும் இந்த அரசு, ஊடகங்களை ஒடுக்கி, மக்களின் கருத்துச் சுதந்திரத் தைக் கட்டுப்படுத்துவதைக் காணக் கூடியதாக உள்ளது.

அத்துடன் வவுனியாவில் கடமையாற்றி வரும் பிராந்திய ஊடகவியலாளர்கள் தொடர்ச்சியாகப் பொலிஸாரின் அச்சு றுத்தலுக்குள்ளாகி வருகின்றார்கள். எனவே, ஜனநாயகத்தைப் பாதுகாப் பதற்காக ஊடகவியலாளர்களாகிய நாம் தொடர்ச்சியாகக் குரல் கொடுப்போம் என்பதை அதிகாரத் தரப்புக்குத் தெரி



வித்துக்கொள்கின்றோம்." - என்றனர்.

போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள், "ஊடக சுதந்திரத்தை உறுதி செய், பொய் வழக்கு போடாதே, ஊடகப் படுகொலைக்கு நீதி வேண்டும், கருத்துச் சுதந்திரமே மக்க ளின் சுதந்திரம்" போன்ற கோஷங்களை யும் எழுப்பியிருந்தனர்.

வவுனியா பழைய பஸ் நிலையத் தில் ஆரம்பமாகிய ஆர்ப்பாட்டப் பேரணி வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையம் வரை சென்றதுடன் மீண்டும் பழைய பஸ் நிலையத்தை அடைந்து முற்றுப் பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழ்த் தேசிய மக்கள் முன் னணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், புதிய ஜனநாயக மாக்ஸ்சிச லெனினி சக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும், வவுனியா வர்த்தக சங்கம், சிகை அலங் கரிப்பாளர் சங்கம், காணாமல் ஆக்கப் பட்ட உறவுகளைத் தேடி கண்டறியும் சங்கங்கள், போராளிகள் நலன்புரிச் சங்கம், தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர் அமைப்பு ஆகிய அமைப்புக்களின் முக்கி யஸ்தர்களும், மதகுருமார், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# மன்னாரைச் சேர்ந்த மேலும் ஏழு பேர் தமிழகத்தில் தஞ்சம்

(மன்னார் நிருபர்)




மன்னாரைச் சேர்ந்த இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 7 பேர் படகு மூலம் நேற்று சென்று தனுஷ்கோடிக்கு அடுத்துள்ள மூன்றாம் மணல் திட்டில் இறங்கியுள்ளனர்.

தகவல் அறிந்த இராமேஸ்வரம் மரைன் பொலிஸார் அவரை மீட்டு முதற் கட்ட விசாரணைக்குப் பின்னர் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைத்தனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொரு ளாதார நெருக்கடி காரணமாகத் தாங்கள் படகு மூலம் தனுஷ்கோடிக்கு வருகை தந்தனர் என்று மன்னார் அகதிகள் தெரிவித்துள்ளனர்.

பொருளாதார நெருக்கடி காரணமாக இன்று வரை 295 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாகத் தனுஷ்கோடி சென்று மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பெண்களாலேயே ஏற்படுத்தப்படுகின்றன

## அம்பாறை பெண்கள் அமைப்பின் தலைவி திருமதி லீலாவதி சோமரெட்ண தெரிவிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இந்த நாட்டில் பெண்களுக்கு எதிரான அதிக வன்முறைகள் ஆண்களை விட பெண்களாலேயே ஏற்படுகின்றன.

இவ்வாறு அம்பாறை பெண்கள் அமைப்பின் தலைவி திருமதி .லீலாவதி சோமரெட்ண தெரிவித்தார்.

மத்திய முகாம் பிரதேசத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது ,வ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்–

பெண்கள் தனது சொந்தக் காலில் நின்று பொருளாதார ரீதியில் மேம்படும் போது எந்தவொரு சக்திக்கும் பயப்படவேண்டிய அவசியம் இல்லை.

இன்று எமது சமூகத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறையினை முற்றாக ஒழிக்காவிட்டாலும் , ஓரளவிற்கேனும் இல்லாதொழிப்பதற்கு அனைவரினதும் பங்களிப்பு அவசியமாகின்றது.

வன்முறை என்பது அதிகாரம் அதிகமுள்ளவர்கள் அதிகாரம் குறைந்தவர்கள் மீது பிரயோகிக்கும் ஒருவகை சக்தியாகும். இது பல்வேறு வகைகளிலும் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பல்வேறுபட்ட நபர்களாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதே வேளை சட்டத்திலுள்ள ஓட்டை காரணமாக குற்றவாளிகள் தப்பித்தும் கொள்கின்றார்கள்.



வீட்டின் வன்முறையின் போதும் சரி ஏனைய மூலகங்கள் ஊடாக இடம்பெறும் வன்முறையின் போதும் அதிகமாக பாதிக்கப்படுபவர்கள் பெண்களாகவும் சிறுவர்களாகவும் உள்ளனர்.

இலங்கையைப் பொறுத்தவரையில் 30 சதவீதமாக பெண்கள் வன்முறைகளால் பாதிக்கப்பட்டு வருகின்றனர் என்று அண்மைக்கால அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இதேபோன்று அதிகமான வன்முறைகள் இடம்பெறும் இடமாக வீடுதான் அமைந்துள்ளன. இதற்குப் பெற்றோர்களும் ஒரு காரணமாக அமைகின்றனர்.

ஒரு பிள்ளை தாயின் கருவில் உருவாகும் போதே வன்முறை ஆரம்பமாகின்றது.

முன்பெல்லாம் ஒரு தாய்க்கும் தகப்பனுக்கும் பிள்ளை பிறந்த பின்னர்தான் அது ஆணா பெண்ணா என்பது தெரியவரும். அந்த செய்தியை அறிவதற்குக் குடும்பத்தினர் பெரும் ஆவலாக இருப்பார்கள். இன்று அந்த நிலமை மாறி கருவுற்ற மறுகணமே அது ஆணா பெண்ணா என்பது தெரிய வந்து விடுகின்றது. இதனால் கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் வன்முறை உருவாவதற்கு வித்திடப்படுகின்றது.

கருவுற்றிருப்பது பெண் என்று தெரிந்ததும் , அதிகமான தந்தைமார் சீதனக் கொடுமை காரணமாக அதனை கருவிலேயே அழிக்க முற்படுகின்றார்கள் .

இன்று இலங்கையின் சனத்தொகையில் ஆண்களை விட பெண்களின் தொகை அதிகரித்துக் கொண்டு செல்லும் அதே வேளை கல்வியறிவியலிலும் உயர் தொழில் துறைகளிலும் பெண்களே முன்னேறி வருகின்றனர்.

ஆனால் சமூகத்தின் எந்த நிலையிலும் பாதிக்கப்படுபவர்கள் பெண்களாகவே இருக்கின்றனர்.

இந்த நிலமை மாற வேண்டும் என்பது பற்றி பிள்ளையின் பெற்றோர் கவலை கொள்வதில்லை. பெண்களுக்கு எதிரான வன்முறை இந்த நாட்டில் இல்லாதொழிக்கப்பட வேண்டும்.பெண்களின் உரிமை மதிக்கப்பட வேண்டும்.– என்றார்.





# இலங்கைக்கான இந்தியத் தூதர் மன்னார்ஆஸ்பத்திரிக்கு விஜயம்

(மன்னார் நிருபர்)

சேவைக் காலத்தை முடித்துக் கொண்டு இலங்கையில் இருந்து வெளியேறவுள்ள இலங்கைக்கான இந்தியத் தூதர் கோபால் பாக்லே மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு விஜயம் செய்துள்ளார்.பிரதி அமைச்சர் காதர் மஸ்தானின் கோரிக்கைக்கு அமைவாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்ட இந்திய துதர் கோபால் பாக்லே மாவட்ட பொது வைத்தியசாலையில் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன், மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் புஸ்பகாந்தன் ஆகியோரைச் சந்தித்து வைத்தியசாலையின் தேவைகள் மற்றும் குறைபாடுகள் குறித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் புஸ்பகாந்தன் வைத்தியசாலையில் உள்ள குறைபாடுகள், தேவைகள் மற்றும் இதர பிரச்சினைகள் தொடர்பில் தெரிவித்தார்.

மன்னார் வைத்தியசாலையின் நீண்ட கால தேவையாக உள்ள விபத்து மற்றும் அவசர பிரிவு நிர்மாணிப்பதற்கான நிதி உதவி, ஸ்கேன் இயந்திரம் பெற்றுக் கொள்வதற்கான நிதி உதவி தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இந்த விடயங்கள் தொடர்பாக இந்திய தூதர் மிகவும் சாதகமான கருத்தை வெளியிட்டார் என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## திருப்தி தராத மகிழ்வு

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் வந்து விட்டன.

தேசிய மட்டத்தில் இரண்டாம் நிலை நமது யாழ்.மாவட்ட மாணவிக்கு என்று பெருமை கொள்கிறோம். ஒரு பாடசாலையில் மட்டும் - வேம்படி மகளிர் கல்லூரியில் மட்டும் - 115 மாணவிகள் 9 பாடங்களிலும் 'ஏ' பெறுபேறு பெற்றிருக்கின்றார்கள் என்று மகிழ்ச்சி கொள்கிறோம்.

இவையெல்லாம் நாம் சந்தோஷப்படவும் பெருமை கொள்ளவும் உரிய விடயங்கள் என்றாலும், நமது ஒட்டுமொத்தக் கல்வி நிலைமை தொடர்பில் நாம் திருப்திப் படலாமா என்பதுதான் எண்ணிப் பார்க்கப்பட வேண்டிய விவகாரமாக உள்ளது.

கல்விதான் சிறந்த செல்வம், ஏனைய செல்வங்கள் அதற்கு இணையாகா என்கிறார் செந்நாப்போதகர் திருவள்ளுவர். அழியாத செல்வமாய் அறிவொளியைத் தூண்டிப் பெருக்குவது கல்விதான். அது மட்டுமே. ஆனாலும் கல்வித்துறையில் நமது தமிழர் தாயகம் - வடக்கும் கிழக்கும் - தொடர்ந்தும் பின்தள்ளப்பட்டு மோசநிலையில் இருப்பதை புள்ளி விவரங்கள் அம்பலப்படுத்துகின்றன.

ஆங்கிலேயரின் பிடியிலிருந்து இலங்கை விடுவிக்கப்பட்டு, சுதந்திரம் அடைந்ததாக கூறப்பட்ட காலம் முதல் நான்கு, ஐந்து தசாப்தங்கள் தமிழர் தாயகத்தின் - குறிப்பாக வடக்கின் - கல்வித்தரம் உச்சமாகவும், நாம் பெருமை கொள்ளத்தக்க விதத்திலும் இருந்தது என்பது உண்மை.

ஆங்கிலேயர் காலத்தில் தலைநகருக்கு நிகராகக் கல்விக் கட்டமைப்புகள் வடக்கிலேயே மிளிர்ந்து நின்றன என்பதும், பெறுபேறுகள் உச்சமாக இருந்தன என்பதும் விதந்துரைக்கத்தக்கவை.

சுதந்திர இலங்கையில் தமிழர்களின் இந்த மேன்மை நிலை கண்டு பொறுக்காத பேரினவாதம் உயர்கல்விக்கு மாவட்ட அடிப்படையில் கோட்டா முறையை அறிமுகப்படுத்தி தமிழர் தாயகக் கல்வியைச் சிதைத்தழிக்க முற்பட்டது. அதில், அது வெற்றி கண்டிருப்பதை இப்போதைய பெறுபேறுகள் நமக்கு புலப்படுத்துகின்றன.

தேசிய மட்டத்தில் நடைபெறும் பரீட்சைப் பெறுபேற்று பகுப்பாய்வின் அடிப்படையில் மாகாணங்களின் கல்வி நிலைத் தரங்கள் வெளியிடப்படுகின்றன.

யுத்த காலம் வரை - யுத்தம் மிக மோசமாக இடம் பெற்ற காலத்தில் கூட - மாகாண ரீதியில் முதலாம், இரண்டாம் நிலைகளில் இருந்த வடக்கும் கிழக்கும் யுத்தம் முடிந்த பின்னர், இப்போது வரை கடைசி இடங்களில் - எட்டாம், ஒன்பதாம் நிலைகளில் - உள்ளன.

இப்போதைய ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை முடிவுகளின் பகுப்பாய்வு இந்த நிலைகளில் ஏதேனும் மாற்றங்களைக் கொண்டு வருமா என்பதை நாம் இனித்தான் பார்க்க வேண்டும்.

ஆயினும் திருப்தி தரும் சாதகமான நிலைமைகள் இன்னும் தோன்றவில்லை.

தனி மாணவனின் அல்லது பாடசாலையின் பெறுபேறுகள் மகிழ்வைத் தந்தாலும், அவற்றையும் தாண்டி கல்வி வலயங்களின், மாவட்டங்களின், ஒட்டுமொத்த தமிழர் தாயகத்தின் கல்வித்துறை பழைய நிலைமையை நோக்கியதாக மேம்படுகின்றது என்ற சாத்தியம் தென்பட்டால் மாத்திரமே நாம் ஓரளவு திருப்தியும் மகிழ்வும் கொள்ள முடியும்.

வடக்கு, கிழக்கு கல்வித்துறை இப்படி நெருக்கடியைச் சந்தித்து நிற்பதற்குப் பல்வேறு காரணிகள் உள்ளன. அவற்றையெல்லாம் தாண்டி, கல்வியின் சிகரத்தை நமது தாயகம் மீண்டும் தொடும் நிலைமையை ஏற்படுத்துவது குறித்து சிந்தித்து, திட்டமிட்டு, ஒன்றுபட்டுச் செயற்படுவது இன்றைய காலத்தின் கட்டாயமாகும்.

# ஆரம்பப் பிரிவு மாணவர்களின் சிறுவர் சந்தை





(ஹஸ்பர்)

திருகோணமலை திஹாறிய தாருஸ்ஸலாம் ஆரம்பப் பாடசாலையின் தரம் 03 மாணவர்களின் இணைப் பாடவிதான செயற்பாடுகளின் ஒன்றான மாணவர் சிறுவர் சந்தை பாடசாலை அதிபர் எம்.எப்.எம்.சபீர் வழி காட்டலில், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் பங்களிப்புடன் நடைபெற்றது.

ஆரம்பப் பிரிவு மாணவர்கள் தமது கணித அறிவையும், சமூகத்தில் தொடர்பாடல் விருத்தி, வியாபார நுணுக்கங்கள் என்பவற்றை பாடசாலையிலேயே கற்றுக் கொடுக்கும் பயிற்சியாக பாடசாலை மாதிரிச் சந்தை இடம் பெற்றது.

சந்தையில் மாணவர்கள் தமது வீட்டுத் தோட்டத்தில் விளைந்த காய்கறிகள், தேங்காய், கீரை வகைகள், பழங்கள், கைப்பணிப் பொருள்கள், உணவுப் பொருள்கள், கற்பித்தல் உபகரணங்கள் போன்றவற்றைக் காட்சிப்படுத்தி வியாபாரத்தில் ஈடுபட்டனர்.

சிறுவர்கள் மகிழ்ச்சியுடன் தமது விற்பனைப் பொருள்களை வியாபாரம் செய்த அதேவேளை பெற்றோரும், பாடசாலை மாணவர்களும் சிறுவர்களிடம் பணம் கொடுத்து பொருள்களைக் கொள்வனவு செய்தனர்.

இந்த மாதிரிச் சந்தை இணைப்பாட விதான செயற்பாடுகள் மாணவர்களின் தனி ஆளுமை விருத்தியை வெளிக் கொண்டு வரும் வகையில் இருந்தது.





# கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியின் ஒளிவிழா நிகழ்வு!

கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியின் வருடாந்த ஒளிவிழா புதன்கிழமை (29) கல்லூரி அதிபர் அருட்சகோதரர் ச.இ.றெஜினோல்ட் தலைமையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக இந்தியா இலங்கை நாடுகளின் டி லாசலா சபையின் மாகாண விருந்தினர் அதிவண பேற்றம் பெரேரா கலந்து கொண்டார்.

முன்னதாக விருந்தினர்கள் கார்மேல் பற்றிமா பெண்கள் கல்லூரியில் இருந்து பாண்ட் வாத்தியம் மற்றும் தேவதைகள் சகிதம் பெருவரவேற்பு அளிக்கப்பட்டது.

விழாவில், கல்முனை பங்குத் தந்தை வண.பிதா.ஏ.தேவதாசன் , கல்முனை சேகரம் மெதடிஸ்த தேவாலய முகாமைத்துவ குரு வண எஸ்.ரவி முருகுப்பிள்ளை, வைத்திய நிபுணர்களான டாக்டர் சி. ஆர்.றொஹான், டாக்டர் எஸ்.என். றொசாந்த், பொறியியலாளர் ஹென்றி அமல்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஒளிவிழாவில் மாணவர்களின் மிகவும் சிறப்பான நிகழ்ச்சிகள் மேடையேறின.

ஒளிவிழாவை முன்னிட்டுக் கல்லூரியில் இடம்பெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

அதிதிகளுக்கும் நத்தார் பரிசுகள் வழங்கப்பட்டன.கல்வித் திணைக்களம் சார்பில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சரவணமுத்து, உதவிக்கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, ஆசிரிய ஆலோசகர் திருமதி ரிகே. பத்திரண, ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் திருமதி மெற்றில்டா பெர்ணான்டஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.





# இன நல்லுறவைக் கட்டியெழுப்பும் விசேட வேலைத் திட்டம் அம்பாறையில்

(எம்.ஏ.றமீஸ்)

சமூகங்களுக்கு இடையில் உள்ள இடைவெளிகளைக் குறைத்து இன நல்லுறவைக் கட்டியெழுப்பும் விஷேட வேலைத்திட்டம் அம்பாறை மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

சமூக மட்டத்தில் உள்ள துறை சார்ந்தவர்களை ஒன்றிணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட விஷேட நிகழ்வு கெப்சோ அமைப்பின் ஏற்பாட்டில் அமைப்பின் சம்மாந்துறை பிராந்திய அலுவலகத்தில் இடம்பெற்றது.

கெப்சோ நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளர் ஏ.ஜே.காமில் இம்டாட் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அமைப்பின் திட்ட ஆலோசகர் கலாநிதி ஏ.எம் அஸ்லம் ஸஜா, திட்ட ஒருங்கிணைப்பாளர் கே.எல்.எம். அக்ரம் உள்ளிட்ட மதத் தலைவர்கள், ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள்,

சிவில் சமூக முக்கியஸ்தர்கள், பொது நல அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

சமூக நல்லுறவைக் கட்டியெழுப்புதல் எனும் தொனிப் பொருளின் கீழ் கெப்சோ நிறுவனத்தால் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்த பிரதேச மட்டங்களிலான நிகழ்வுகளை அடுத்து, மாவட்ட மட்டத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வின்போது இன நல்லுறவை ஏற்படுத்துவதில் சமூக மட்டத்தில் காணப்படும் சவால்களை கண்டறிந்து அதற்கான முன்மொழிவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டன.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள சமூகங்களிடையே காணப்படும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தொடர்பில் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

அவ்வாறான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழி வகைகளும் ஆராயப்பட்டன. இது தவிர, இன மத நல்லுறவை மேம்படுத்துவதற்காகவும், சமூகங்களுக்கிடையே சமாதானத்தை நிலை நாட்டி ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதன் ஊடாக பிரச்சினைகளற்ற எதிர்கால சந்ததியினரை உருவாக்கும் வகையில் இவ்வேலைத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

அனைத்து இனத்தவர்கள் மத்தியிலும் நிரந்தர நல்லிணக்கம் மிளிர்வதற்கான நடைமுறை பற்றி இதன்போது விசேடமாகக் கலந்துரையாடப்பட்டது.






### திண்மக்கழிவு முகாமைத்துவத்துக்காக

# களுவாஞ்சிக்குடி வைத்தியசாலைக்கு கிடைத்துள்ளன இரு தங்கங்கள்!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

மட்டக்களப்பு மாவட்ட களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலைக்கு 3R System திண்ம கழிவு முகாமைத்துவத்தில் தேசிய மற்றும் சர்வதேச விருதுகள் கிடைத்துள்ளன.

இலங்கையிலுள்ள வைத்திய சாலைகளுள் இலங்கைக்கு கிடைத்த இரண்டாவது விருது இதுவாகும்.

முதல் விருது அம்பாறை பொது வைத்தியசாலைக்கு கிடைத்திருந்தது.

இந்த விருதைப் பெறுவதற்குக் காரண கர்த்தாக்களாக விளங்கிய களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் புவனேந் திரநாதன் , டாக்டர் மயூரேசன் , மட்டக் களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜீ.சுகுணன், வைத் தியசாலை வைத்தியர்கள் , வைத்திய சாலையின் உத்தியோஸ்தர்கள், ஊழி யர்கள், தாதி உத்தியோஸ்தர், வைத்திய சாலை நலன்புரி சங்க உறுப்பினர்கள் ஆகியோர் பாராட்டப்படவேண்டியவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.







# சம்மாந்துறை இலக்கிய விழாவில் கலைஞர்களுக்குக் கௌரவிப்பு!

**(அஸ்ஹர் ஆதம்)**

சம்மாந்துறை பிரதேச செயலர் பிரிவில் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் அனு சரணையில் ஏற்பாடு செய்யப்பட்ட பிரதேச கலை இலக்கிய விழா – 2023 பிரதேச செயலர் எஸ்.எல்.எம். ஹனீபா தலைமையில் அப்துல் மஜீட் மண் டபத்தில் செவ்வாய்க்கிழமை (28) நடை பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக்க அபேவிக்ரமவும், கௌரவ அதிதிகளாக கிழக்கு மாகாண பண் பாட்டலுவலகள் திணைக்கள பணிப் பாளர் நவநீதன், மேலதிக மாவட்ட செயலாளர் வீ.ஜெகதீசன் ஆகியோரும் இலக்கிய அதிதியாக எழுத்தாளரும் வைத்தியருமான எம்.எம். நௌசாட்டும் கலந்து கொண்டனர்.

இங்கு கலை கலாசார நிகழ்வுக ளும் இடம்பெற்றன. போட்டி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்க ளும் வழங்கி வைக்கப் பட்டன. அத்துடன் பிரதேச கலைஞர்கள் சிலரும் கௌர விக்கப்பட்டனர்.

இதில் பிரதேச செயலக உயர் அதி காரிகள் மற்றும் உத்தியோகத்தகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# குளம் போல் காட்சியளிக்கும் மஸ்ஜித்துல் அக்பர் வீதி!

**(அஸ்ஹர் ஆதம்)**

மருதமுனை பெரிய நீலாவனை எல்லை வீதியான மஸ்ஜித்துல் அக்பர் வீதியின் வம்மியடி சந்தியில் நீண்ட தூரத்துக்கு வெள்ள நீர் தேங்கி நிற்கிறது.

அவ்விடம் குளம் போல் காட்சிய ளிக்கிறது என்று பிரதேச வாசிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதனால் இவ்விடத்தில் அமைந் துள்ள வர்த்தக நிலையங்களின் வியாபார நடவடிக்கைகள் பாதிப் படைந்துள்ளன. பாதசாரிகளும், மாணவமாணவிகளும் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர். போதிய வடிகான் வசதியின்றி இவ்வீதி அபிவிருத்தி செய்யப்பட்டதால் இவ்வாறான துர்ப் பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது என்று பொது மக்கள் விசனம் தெரிவிக் கின்றனர்.

கிழக்கு மாகாண வீதி அபிவி ருத்தி திணைக்களத்தின் கல்முனை பொறியியளாளர் பிரிவும், கல்முனை மாநகர சபையும் இணைந்து இவ்வீதியின் அவல நிலையைப் போக்க.முன்வரவேண்டும் என்று இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முதற் கட்டமாக குப்பைகளால் அடைத்துள்ள வடிகானைத் துப்பரவு செய்து நீர் தேங்கி நிற்காமல்.ஓட வழி செய்ய வேண்டும் எனவும் பிரதேச.வாசிகள் கோரிக்கை விடுத் துள்ளனர்.





# மண்டானை பாடசாலைக்கு சுவிஸ் உதயத்தின் உதவிக்கரம்!

**(பழுவூரான்)**

அம்பாறை மாவட்டத்தின் திருக் கோவில் கல்வி வலயத்துக்கு உட்பட்ட விநாயகபுரம் மண்டானை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் மிகவும் வறிய நிலையில் உள்ள மாணவர்க ளுக்கான கற்றல் உபகரணங்கள் வழங் கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (28) இடம்பெற்றது.

சுவிஸ் உதயம் ஏற்பாட்டில் அதன் தாய்ச் சங்கச் செயலாளர் அம்பலவாணர் ராஜனின் பிறந்த நாளை முன்னிட்டு இந்தக் கற்றல் உபகரணங்கள் வழங் கப்பட்டன.

பாடசாலையின் அதிபர் டினேஸ்ராஜன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ் வில், சுவிஸ் உதயம் தாய்ச் சங்கத்தின் பொருளாளர் க.துரைநாயகம், செயலா ளர் அம்பலவாணர் ராஜன், உப பொரு ளாளர் பேரின்பராஜா அவரது பாரியார் மற்றும் சுவிஸ் உதயத்தின் கிழக்கு மாகாண சங்கத்தின் செயலாளர் திருமதி ரொமிலா செங்கமலன் மற்றும் பொருளா ளர் அக்கரை பாக்கியன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது சுமார் 50 மாண வர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

அத்துடன் உப பொருளாளர் பேரின் பராஜாவின் சொந்த நிதியில் பாடசாலையின் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் ஒரு தொகை நிதியும் இதன்போது வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.




# கரிப்பட்டமுறிப்பு அ.த.க. பாடசாலை 100 வீதம் சித்தியடைந்து சாதனை!

(சண்முகம் தவசீலன் )

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட கரிப்பட்ட முறிப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் இருந்து 2022 ஆம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய 10 மாணவர்களும் சித்தியடைந்து பாடசாலை நூறு வீத சித்தியைப் பதிவு செய்துள்ளது.

முல்லைதீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கரிப்பட்ட முறிப்புக் கிராம அலுவலர் பிரிவில் ஒட்டுசுட்டான் மாங் குளம் பிரதான வீதியில் அமைந் திருக்கும் இந்தக் கரிப்பட்ட முறிப்பு அரசியல் தமிழ் கலவன் பாடசாலை அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் இயங்கி வருகின்றது.

இங்கு மாணவர்களுக்கான உரிய போக்குவரத்து வசதிகள் இன்றி பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இதேபோன்று மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் யாழ்ப்பாணம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த ஆசிரியர்களும் இந்த பாடசாலைக்கு மிகவும் நெருக்கடியான போக்குவரத்து சேவைகளுக்கு மத்தியில் வருகை வந்து அவர்களுக்கான கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் 2022 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைக்கு தோன்றிய 10 மாணவர்களும் 100 வீத சித்தியைப் பெற்றுள்ளனர்.

குகநேசன் யாழின்பன் 7ஏ 2 பி, உதயந்தி கோபிதன் 6 ஏ 2சி எ விக்கினேஸ்வரன் அபிராமி 5ஏ 3பி, தேவராஜ் வினோதா 5ஏ 2பி சி எஸ், பத்மரஞ்சன் திருசாளினி 3ஏ 3பி 3சி, செல்வராசா பவிது 3ஏ 4பி சி எஸ்,

தயானந்தசெல்வன் தனோஜா 2ஏ 2பி 3சி 2எஸ், சுதாகரன் சுகந்தியா 2ஏ 3பி 3சி எஸ், பத்மரஞ்சன் மதுமிலன் 2 ஏ பி 5 சி எஸ்,

பத்மநாதன் நிருபா ஏ 2பி 4 சி 2 எஸ் ஆகிய பெறுபேறுகளைப் பெற்று சித்தியடைந்து உயர்தரம் கற்க தகுதி பெற்றுள்ளனர்.

# தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தால் முதுசங்களைப் பாதுகாக்கும் திட்டம்!

(அஸ்ஹர் ஆதம்)

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் முஸ்லிம்களின் பாரம்பரியங்களையும் முதுசங்களையும் பாதுகாக்கும் வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக் கப்பட்டுள்ளது.

இந்த நாட்டின் வரலாற்றோடு இரண்டறக் கலந்துள்ள முஸ்லிம்களின் பாரம்பரியங்களையும்,

முதுசங்களையும் பாதுகாக்கும் நோக்குடன் தென் கிழக்குப் பல்கலைக் கழகம் காத்திரமான பங்களிப்புகளைச் செய்து வருகின்றது.

இதற்குத் தென்கிழக்குப் பல்கலைக் கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீடம், அரும்பொருள் காட்சிசாலை மற்றும் பல்கலைக்கழக நூலகம் போன்றன முக்கிய பங்காற்றி வருகின்றன.

அரபுத் தமிழில் வெளிவந்த நூல் களும் இலக்கியங்களும் ஆவ ணங்களும் இலங்கை முஸ்லிம்களின் தனித்துவமான முதுசங்களாகும்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகம் சுமார் 90 அரபுத் தமிழ் நூல்கள், ஆவணங்களைத் தற்போது திரட்டியுள்ளது. இவை அன்பளிப்பாக கிடைக்கப் பெற்றவையாகும். இவற்றை எண்ணியமப்படுத்தி ஒரு மின்னியல் நூலகமாக மாற்றியமைத்துள்ளோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முயற்சியை மேலும் விரிவு படுத்தும் நோக்கில் இஸ்லாமிய கற்கை கள் மற்றும் அரபு மொழிப் பீடம், பல் கலைக்கழக நூலகத்துடன் இணைந்து, நாடளாவிய ரீதியில் அரபுத் தமிழ் மொழியில் அமைந்துள்ள நூல் கள், கையெழுத்துப் பிரதிகள், ஆவணங் களைப் பாதுகாக்கும் ஒரு திட் டத்தைஆரம்பித்துள்ளது.

முன்னோர்களால் பயன்படுத்திப் பேணப்பட்ட அரபுத் தமிழ் மொழியால் ஆக்கப்பட்ட நூல்கள், ஆவணங்கள் இருப்பின் அவற்றைக்கையளித்து உதவுமாறு தென் கிழக்குப் பல்கலைக் கழக பேராசிரியர் கலாநிதி எஸ்.எம். எம்.மஸாஹிர் மற்றும் சிரேஷ்ட உதவி நூலகர் எஸ்.எல்.எம்.சஜீர் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

மேலதிக தகவல்களை 077284 9467/ 0772635808 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் .



# உரிய வடிகால்கள் இன்றி வீதிகளில் பாயும் வெள்ளநீர்!

## பாடசாலை செல்லமுடியாது தவிக்கும் மந்துவில் கிராம மாணவர்கள்

**(சண்முகம் தவசீலன்)**

உரிய வடிகால்கள் இன்றி வீதிகளில் பாயும் வெள்ளநீரால் பாடசாலை செல்ல முடியாது மந்துவில் கிராம மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு கல்வி வலயத்துக்கு உட்பட்ட புதுக்குடியிருப்பு மந்துவில் அரசரத்தினம் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் பாடசாலை செல்ல முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது என்று கவலை வெளியிட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குச் சொந்தமான மந்துவில் கிராமத்தினுடைய வீதிகளில் உரிய வடிகால் அமைப்புகள் இல்லை. மீள் குடியேற்றத்தின் பின்னர் சுமார் 14 ஆண்டுகளாக இன்று வரை எந்த திருத்த பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை. வடிகான்களில் ஓட வேண்டிய நீர் பிரதான பாதைகள் ஊடாகவே ஓடுகிறது. எனவே பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள் முதல் வயோதிபர்கள், மாற்றுத்திறனாளிகள் என பலரும் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.



புது குடியிருப்பு பிரதேச சபையினருக்கு இந்த விடயம் தொடர்பில் தெரியப்படுத்தியும் பிரதேச சபையினுடைய தவிசாளர் உள்ளிட்டோர் இந்த இடங்களைப் பார்வையிட்ட போதும் இன்று வரை இதற்கான எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

எனவே பிரதேச சபையினர் மிக விரைவாக குறித்த பகுதியில் உரிய வடிகான்களை சீரமைத்து பாடசாலை மாணவர்கள் பாடசாலை சென்று வருவதற்கும் பொது மக்களினுடைய போக்குவரத்துக்கும் ஏற்ற வசதிகளை செய்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# மன்னார் மாவட்டத்தில் இருந்து 5 மாணவர்கள் மலேசியாவுக்கு

(மன்னார் நிருபர்)

மலேசியாவின் கோலாலம்பூரில் நாளை (03) ஆரம்பமாகவுள்ள சர்வதேச மனக்கணித போட்டியில் கலந்து கொள்வதற்காக மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 5 மாணவர்கள் மலேசியாவுக்குச் செல்லவுள்ளனர்.

இந்தப் போட்டியில் 80 இற்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப்போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்துகொள்ளும் 60 மாணவர்களில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 5 மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.



# மகளுடன் தகாத முறையில் நடந்துகொண்ட தந்தைக்கு 12 ஆண்டுகள் கடூழியச் சிறை!



(கி.வசந்தரூபன்)

வவுனியா – சுந்தரபுரம் பகுதியில் 14 வயது மகளுடன் தகாத முறையில் நடந்து கொண்ட தந்தைக்குக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தீர்ப்பளித்துள்ளார்.

தந்தை மகளைத் தகாத முறைக்கு உட்படுத்தியமையால் மகளுக்கு ஆண் குழந்தை ஒன்றும் பிறந்துள்ளது.

இந்நிலையில், எதிரியான தந்தைக்கு 12 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து நீதிபதி இளஞ்செழியன் நேற்று தீர்ப்பளித்துள்ளார்.

இந்தச் சம்பவம் 2013 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இடம்பெற்றுள்ளது. தாய் வெளிநாடு சென்றிருந்த நிலையில் மூன்று தடவைகள் தந்தையால் தகாத முறைக்கு உட்படுத்தப்பட்ட 14 வயது மகளான சிறுமி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்த போது கர்ப்பமாக இருந்தமை தெரிய வந்துள்ளது.

அந்தச் சிறுமிக்கு ஆண் குழந்தை பிறந்ததையடுத்து மரபணு பரிசோதனையின்போது எதிரியான தந்தையே பிறந்த ஆண் குழந்தைக்குத் தந்தையென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அரச சட்டதரணி தர்சிகா திருக்குமரநாதன் வழக்கை நெறிப்படுத்தியுள்ளார்.

இதற்கமைய, எதிரியான தந்தைக்கு 12 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்துள்ளார்.









# சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் யாழ்ப்பாணத்தில் சேவைகள் ஆரம்பம்!

(பிரபாகரன் டிலக்சன்)

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் அனுசரணையின் கீழ் இலங்கை சமவாயப் பணியகத்தால் யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முதலாவது MICE Expo ஆனது யாழ்ப்பாணத்தில் ஆரம்பமானது.

நேற்று முன்தினம் (30) ஆரம்பமான இந்த நிகழ்வு நாளை 03 ஆம் திகதிவரை தொடர்ச்சியாக நடைபெறவுள்ளது.

ஆரம்ப நிகழ்வில் இலங்கை சமவாயப் பணியக தலைவர் ரிசும் ஜெயசூரிய, இலங்கை சமவாயப் பணியக பொது முகாமையாளர் கிரிசாந்த பெர்ணான்டோ, வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, வட மாகாண சுற்றுலா அதிகாகார சபையின் தலைவர் பத்திநாதன் மற்றும் துறைசார் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது கலாச்சார நடனங்கள், இலங்கை சுற்றுலாத் தளங்களின் காணொளிகளும் இடம்பெற்றன.



விசேடமாகத் தென்னிந்தியாவிலிருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு வட மாகாணத்தைச் சிறந்த MICE சுற்றுலாத் தளமாக விளம்பரப்படுத்துவதை இந்த நிகழ்ச்சி நோக்காகக் கொண்டுள்ளது.

கடல் மற்றும் வான்வழிசார் தென்னிந்திய இணைப்பு நிலையூடாக இந்திய சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுப்பதற்கு யாழ்ப்பாணம் மிகப் பொருத்தமானதொரு நுழைவாயிலாகக் காணப்படும்.

வணிக மன்றங்கள், வலையமைப்பு சார் அமர்வுகள், விசேட இராப் போசன விருந்துபசாரம் மற்றும் யாழ்ப்பாணத்தைப் பரிச்சயப்படுத்துவதற்கான சுற்றுலா ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு சிறந்த ஊடாடும் தளமாக யாழ்ப்பாண MICE Expo காணப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் ஏற்பாட்டாளர்கள் வெளியிட்ட அறிக்கையில், மூன்று நாள் MICE Expo 2023 நிகழ்ச்சியானது வட மாகாணத்தை வணிக நிகழ்வுகள், சந்திப்புகள், ஊக்குவிப்புகள், மாநாடுகள் மற்றும் கண்காட்சிகளை நடத்துவதற்கு உகந்த தளமாகக் காட்சிப்படுத்தும்.

தெரிவு செய்யப்பட்ட 40 இற்கும் அதிகமான வாங்குநர்கள் மற்றும் 5 ஊடகவியலாளர்கள் வருகை தந்துள்ளனர்.

தென்னிந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள இந்தப் பிரதிநிதிகள் குழுவானது தென்னிந்திய MICE அமைப்பு, இந்தியப் பயண முகவர்கள் அமைப்பு, இந்தியப் பயண முகவர்கள் சம்மேளனம், இந்தியத்தொழில்முனைவோர் முகவர்கள் அமைப்பு மற்றும் தமிழ்நாடு டிரவல் மார்ட் சங்கம் ஆகிய அமைப்புகளின் பிராந்தியத் தலைவர்களைக் கொண்டுள்ளது.

வட மாகாண சுற்றுலாத்துறை சேவை வழங்குநர்களை அதிக பட்சமாக வெளிப்படுத்திக் கொள்வதற்கு யாழ்ப்பாண MICE Expo தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்திய வாங்குநர்கள் மற்றும் உள்நாட்டு வாங்குநர்களை இலக்கு வைத்து ஒன்றுக்கு இரண்டு அணுகுமுறை கடைப்பிடிக்கப்படும்.

இந்நிகழ்ச்சியானது உள்ளூர் விற்பனையாளர்கள் மற்றும் சர்வதேச வாங்குநர்களிடமிருந்து பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.– தெரிவிக்கப்பட்டுள்ளது.



# களத்தில் நின்று காலத்தை வென்ற கவிஞன்...!

■ நவீனன்

**(நாளை டிசெம்பர் 3 ஆம் திகதி ஈழப் பெருங்கவி புதுவை இரத்தின துரையின் பிறந்த நாள். அதனை முன் னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது)**

புதுவை இரத்தினதுரையின் படைப்பிலக்கியம் ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு ஒரு உந்துசக்தியாக இருந்ததை மறுதலிக்க முடியாது. சுதந்திர கவிதை உலகில் போர்க்கால இலக்கியத்துக்கு இலக்கணம் வகுத்துக் கொடுத்த பெருமை அவரைச் சாரும்.

உண்மையில் விடுதலைப்போரின் வரலாற்றுடன் சேர்ந்து அவரது கவிதைகளும் சமாந்திரமாகவே பயணித்துள்ளன எனலாம்.

கனதியான கவிதை வீச்சும், உயிர் மூச்சுமான அவரது படைப்புக்களுக்கு ஈழ விடுதலைப் போரில் தனியானதோர் இடமுண்டு. ஈழ விடுதலைப் போராட்டம் போரியலில் முனைப்புப்பெற்ற 1987இற்கு முந்திய காலத்தில் அவரது கவிதைகள் ஒரு தேசம் என்ற கருத்தின் வலிமையை உரைத்தன. அவையே எம் தேசியத்து எழுச்சியின் நம்பிக்கையை எடுத்துக் கூறின.


**விடுதலைப் போர்க்கவி**


ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் விடுதலைக்காக கவிஞர் புதுவை இரத்தினதுரை, போராட்டத்தில் பங்கேற்று புரட்சிப் பாக்களை எழுதி இளைஞர்களை எழுச்சி கொள்ளச் செய்தவர். கவிஞர் புதுவையின் ஆழ வரிகளை ஒரு முறை உணர்ந்து பார்த்தோமானால்...

இழந்து போனவனுக்கு
வாழ்க்கை துயரம்!
எழுந்து நடப்பவனுக்கு
எல்லாமே மதுரம்!
துயரம் அழுவதற்காக
அல்ல! எழுவதற்காக!
எனத் தைரியம் மேலோங்கும்.

**புத்தூரில் மலர்ந்த கவி**

புதுவை இரத்தினதுரை என்று அழைக்கப்படும் வரதலிங்கம் இரத்தினதுரை புத்தூரில் 1948 டிசெம்பர் 3 ஆம் திகதி பிறந்தார். ஈழத்துக் கவிஞரும், பாடலாசிரியரும், சிற்பக் கலைஞரும் ஆவார். ஏராளமான தமிழ்த் தேசியப் புரட்சிப் பாடல்களை எழுதியுள்ளார்.






14 ஆவது வயதிலேயே கவிதைகளை எழுதத் தொடங்கிய இவர் வியாசன், மாலிகா என்ற புனைபெயர்களிலும் பல கவிதைகள் எழுதியுள்ளார். இவர் எழுதிய 'இந்த மண் எங்களின் சொந்த மண்...' பலரது வரவேற்பையும் பெற்ற உணர்வு பூர்வமான பாடல் ஆகும்.

புதுவை இரத்தினதுரை எழுதிய வானம் சிவக்கிறது (1970), இரத்த புஷ்பங்கள்(1980), ஒரு தோழனின் காதல் கடிதம், நினைவழியா நாள்கள், உலைக்களம், பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும் ஆகியன வெளிவந்த கவிதைத் தொகுப்புகள் ஆகும்.

**களத்தில் நின்ற கவிஞர்**

ஒரு படைப்பாளி தன் சொந்த அனுபவங்களில் உயிர் வாழ்கிறான். படைப்பாளியின் சுயானுபவம் அதில் தங்கியிருக்கிற போது படைப்பு உயிர்ப்போடு நிற்கும். ஒவ்வொரு படைப்பாளிக்கும் அவரவர் வாழ்வியல் சார்ந்து அனுபவம் ஒவ்வொரு வகையாய் அமையும். அவ்வாறே புதுவையின் வரிகளும்.

வெடிக்கும் எதிரிகணைகள்
ஒவ்வொன்றுக்கும்...
விரல்மடித்துக் கணக்கெடுத்தபடி
இருந்தேன்...
இடையிற் கண்ணயர்ந்து
போனேன்...
விழிப்புற்ற போதும்
வந்து வெடித்தன
குண்டுகள்...
மீண்டும் எண்ணத்
தொடங்கினேன்...
இடையிற் சிரிப்பு வந்தது,
சிரித்தேன்...
விளையாட்டாகிவிட்டது
யுத்தம்...
அப்பாடா விடிந்து
வருகிறது...
இரவு எத்தனை
குண்டுகள்
என்றாள் மனைவி...
எழுந்தமானத்தில்
எழுபது என்றேன்...
நேற்று எண்பது
ஏன் பத்துக் குறைந்தது
என்றாள்...
நெடுங்கேணியில்தான்
நிற்கிறான் கேட்டுப் பார்
கேட்காமலா விடுவோம்?

என களத்தில் உணர்வோடு நின்ற கவிஞர் அவர். கவிதை எழுத ஆரம்பித்தது தொட்டு இன்றுவரை அவரது பாடு பொருளில் பெருமளவு மாற்றமில்லை. மானுடம் எங்கு வதைபடுகிறதோ, அங்கெல்லாம் அவர்களுடைய மொழியில் அவரது கவிதை பேசும்.

வதைபடுதல் ஒவ்வொரு இடத்தும் ஒவ்வொரு வகையாக வெளிப்படும் என்பது தவிர வேறொன்றுமில்லை.

**கடைசி வரை ஓயாத கவிஞன்**

அந்தக் கால உணர்வுகளின் குரலாக புதுவையின் படைப்புக்கள் பதிவு பெற்றுள்ளன. புதுவை இரத்தினதுரை கவிதைகள், பாடல்கள் பற்றி எம்முள்ளே பேசப்படும் வேளைகளில் "காலத்தின் குரல்கள்" என்றே அவற்றை கூறலாம்.

கவிஞர் இணைத்துக் கொண்ட இலட்சிய வாழ்வும் அவரது படைப்புக்களில் சேர்ந்துள்ளது. இதனாலேயே அவரை "காலத்தின் குரலாகப் பேசும்" கவிஞராக ஆக்கியது எனலாம். புதுவை இரத்தினதுரையின் அற்புதமான கவி ஆற்றலும், அனாசயமான சொல் வளமும் அவரைப் பெரும் கவிஞர்களது வரிசையில் சேர்த்துள்ளது.

இந்த மண் எங்களின்
சொந்த மண் இதன்
எல்லைகள் மீறி
யார் வந்தவன்...
நிலைகள் தளர்ந்து
தலைகள் குனிந்து
நின்றது போதும்
தமிழா.. உந்தன்
கலைகள் அழிந்து
கவலை மிகுந்து
கண்டது போதும்
தமிழா இன்னும்
உயிரை நினைத்து
உடலை சுமந்து
ஓடவா போகிறாய்
தமிழா...

**(15ஆம் பக்கம் பார்க்க)**

# களத்தில் நின்று காலத்தை வென்ற கவிஞன்...!

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

என நெருப்பாகத் தொடங்கி நீளும் ஒரு பாடல் புதுவை இரத்தினதுரை உணர்ச்சி பொங்க எழுதியுள்ளார். அந்த பாடல் வரிகள் பாரிய தாக்கத்தை மக்கள் மனத்தில் ஏற்படுத்தியது.

வியட்நாம் போராட்டம் நிகழ்ந்த போது, ஒரு வியட்நாமியனாக அவர் கவிதை உணரச் செய்தது. சிலியில் அதிபர் ஆலண்டே கொல்லப்பட்டபோது, சிலிக் குடிமகனாக அவரது கவிதை கோபம் கொண்டெழுந்தது. 1971 ஆம் ஆண்டில் சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்ட போது, அவர்களுடன் சேர்ந்து அவரது கவிதை அழுதது. யாழ்ப்பாணத்தில் சாதி ஒழிப்புப் போராட்டம் நடைபெற்ற போது, அந்தப் போராட்ட சக்திகளோடு இணைந்து அவருடைய குரல் ஒலித்தது. இப்படி களமாடுவதிலும், கவிதையாடுவதிலும் புதுவை கடைசிவரை ஓயவில்லை.

**தமிழ் இனத்தின் குரல்**

தமிழ் இனத்தின் சார்பாக புதுவையின் குரல் எப்போதும் கேட்டது. அவருடைய காலக் கவிதைகள் எப்போதும் சூடு தணியாமல் உணர்வை வைத்திருந்தன. இக்கவிஞன் கூறியது போல "இந்தப் போராட்டத்துக்கு என்னை ஒப்புக் கொடுத்திருக்கின்றேன். இந்தப் பணி முற்றுப் பெறும் போது, வேறு எங்குவரை துயரக் குரல் கேட்கிறதோ, என்னுடைய கவிதைகளுமாக நான் அங்கு போய்ச் சேருவேன்" என வியாசிக்கின்றார்.

ஊர் பிரிந்தோம்
ஏதும் எடுக்கவில்லை
அகப்பட்ட
கொஞ்சம் அரிசி,
பருப்பு, இரண்டு பாய்,
இருமல் மருந்து,
மனைவியின்
மாற்றுடுப்பு மூன்று,
காற்றுப் போய்க்கிடந்த
மிதிவண்டி,
காணியுறுதி,
அடையாள அட்டை
அவ்வளவே,
புறப்பட்டு விட்டோம்.
இப்போ உணருகிறேன்
உலகில் தாளாத
துயரெது?
ஊரிழந்து போதல் தான்.

இந்த கொடூர நிலை அரை நூற்றாண்டாக எங்கள் ஈழமண்ணில் தொடர்ந்தது.

**மானுட விடுதலை வேண்டி**

தமிழ் இன விடுதலை வேண்டியும், அதி உச்ச எல்லையான மானுட விடுதலையை கோரிய கவிஞனை சாதாரண மான இலக்கியக் கோட்பாட்டுக்குள் சுருக்கிவிட இயலாது. ஏனெனில் புதுவை எப்போதும் களமும் கவிதையுமாய் வாழ்ந்தவர்.

போர்க்கால இலக்கியத்துக்கு இலக்கணம் வகுத்த பெருமைக்குரிய வரும் புதுவை எனலாம். எங்கள் விடுதலைப் போராட்ட வாழ்வையும், வரலாற்றையும் இலக்கிய இயக்கத்துக்கு முதன்மைப்படுத்தி தமிழ்த் தேசிய பிரக்ஞையை விழிப்புறச் செய்ய உழைத்தவரும் அவரே.

எங்கள் விடுதலைப்போராட்டம் எதிர்கால மாணவர்களுக்கான ஆய்வுப் பொருளாகும் காலம் வரும். அவ்வேளையில் விடுதலைப் போராட்டம் கடந்துவந்த வரலாற்றுப் பாதையின் போக்குகளையும், இந்த போருடன் வாழ்ந்த மானிடரின் மன உணர்வுகளையும் சொல்லும் ஆய்வுக்கு புதுவையின் கவிதைகளை உசாத்துணையாகும்.

இதனாலேயே இவர் எழுதிய 'பிட்டுக்கு மண் சுமந்த பெருமானார்' என்ற ஆன்மிகப் பாடலை கூட இலங்கை இராணுவ 2014 செப்ரெம்ப ரில் ஒலிபரப்புவதற்குத் தடை செய்து எதிர்கால வரலாற்றை மூடி மறைக்க ஆதிக்க அரசு எத்தனிக்கிறது.

புதுவை இரத்தினதுரையின் கவிதைகள் பதுங்குகுழி வாழ்க்கைக்கும், விமானத்தின் குண்டு வீச்சுக்களும், பீரங்கிகளின் எறிகணை வீச்சுக்களும் அவரது கவிதைப் பொருளாயின. போர்க் கால படுகொலை வீச்சுக் கண்டு வெம்பி, வெடித்து கோபம் கொண்டு சாபமிட்டன புதுவை கவிதைகளும் தான். அழுதபடியே சேர்ந்துவந்தன வரிகள். ஆனால் நம்பிக்கை தளராத வரிகளுடன் விடுதலைக் கனவு குலையாத பாடல்களாய் மீள மிளிர்ந்தன.

பொருள் தடை, மருந்துத் தடை, போக்குவரத்துத் தடையென எல்லாத் தடையினுள்ளும் கிடந்தழுந்திய எம்மக்களுடன் சேர்ந்திருந்தன துயரத்தை கூறியதும் புதுவையின் கவிதைகள்.

வன்னியினுள்ளே நடந்தேறிய விடுதலை தியாக வேள்வியில் சேர்ந்தொலித்தன அவரது பாடல்களும் தான்.

சும்மா காற்றில் பற்றியா
இந்தத் தீ மூண்டது?
இந்த அனல் பிடித்தெரிய
எத்தனை காலம் பிடித்தது...
எத்தனை பேரைத் தீய்த்து
இந்த தீ வளர்த்தோம்...
எத்தனை பேரை நெய்யாக
வார்த்தோம்...
அணைய விடக்கூடாது
ஊதிக்கொண்டேயிரு...
பற்றியெரியப் போகுதெனப்
பதறுவர்
ஊதுவதை நிறுத்தி விடாதே...
இந்தத் தீயின்
சுவாலையில்தான்
மண் தின்னிகள் மரணிக்கும்...

இத்தகைய கவிப்படைப்பின் மூலம் ஈழத் தமிழ் மக்களை போராட்ட களத்துக்குச் செல்ல வழியமைத்தவர்



புதுவை இரத்தினதுரை.

**களத்தில் மலர்ந்தவை**

இராணுவ ஆக்கிரமிப்புக்கு காலத்தில் அவரது பாடல்கள் காடுகளின் கரந்து விடுதலை வாழ்வியலுடன் பயணித்தன. அப்போது 1989 இல் வெளிவந்த ஒலிநாடாவான 'களத்தில் மலர்ந்தவை' ஈழமெங்கும் எட்டுத் திசையிலும் ஒலித்த பாடல்களாகும்.

அத்தோடு புதுவை எழுதிய பாடல்களில் இந்த மண் எங்களின் சொந்த மண், வேர்கள் வெளியினில் தெரிவதில்லை, காவலரண் மீது காவலிருக்கின்ற ஆசை மகளே, பொங்கிடும் கடற்கரை ஓரத்திலே, காலநதி ஓடுகின்ற கரையில் வீசும் காற்று, தீயினில் எரியாத தீபங்களே, சங்கு முழங்கடா தமிழா என்றும் தமிழர் மனங்களில் எப்போதும் ஒலித்துக் கொண்டே இருக்கும்.

ஈழ விடுதலைக்காக ஒவ்வொரு தமிழனிடமும் கவிதை மூலமாக உணர்வூட்டினார் புதுவை இரத்தினதுரை. மனித நேயமுள்ள உலகத்து மனிதர்களிடம் உரத்து கூவினார். நெஞ்சு வெடித்து இனத்துக்காகக் கதறிய புதுவையை போர் மௌனித்த 2009 மே19 பின்னர் காணாமல் ஆக்கப் பட்டார். எங்கள் மக்களுக்காக ஓங்கி ஒலித்த இந்த கவிஞனுக்கு என்ன சொல்ல போகிறது இந்த உலகம் ?

மக்கள் மீதான ஒடுக்கு முறைக்கும், அவர்களின் விடுதலைக்குமாகப் பயணித்துச் சர்வ தேசம் கவிதைப் பயணம் மூலமாக மட்டுமல்ல, களப் பணியாலும் வளப்படுத்திய பாப்லோ நெருடா, நசீம் இக்மத், வால்ட் விட்மன், பாலஸ்தீனக் கவிஞன் மக்மூத் தார்வீஷ், கருப்பினக் கவிஞன் லாஸ்டன் ஹ்யூஸ் இவர்களின் திசைவழியில் புதுவை இரத்தினதுரையும் பயணிக்கிறார் என்றால் மிகையாகாது.

# நாகார்ஜுனா சாகர் அணைப் பாதுகாப்பு மத்திய ரிசர்வ் பொலிஸ் படையின் வசம்

நாகார்ஜுனா சாகர் அணை தொடர்பில் ஆந்திர - தெலுங்கான மாநில பொலிஸாருக்கு இடையில் மோதல் ஏற்பட்டமையை அடுத்து அணையின் பாதுகாப்பு மத்திய ரிசர்வ் பொலிஸ் படையின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஆந்திர - தெலுங்கான மாநிலங்களுக்கு இடையே கிருஷ்ணா நதி பாய்கிறது . அந்த நதிக்கு குறுக்கில் நாகார் ஜுனா சாகர் அணை அமைந்துள்ளது. அணையின் பாதுகாப்புகள் அனைத்தும் தெலுங்கானாவின் கட்டுப்பாட்டில் இயங்குகிறது.

இந்நிலையில் நேற்று முன்தினம் அதிகாலை 2 மணியளவில் கிட்டத்தட்ட 700 ஆந்திர பொலிஸார் அணைக்குள் நுழைந்து வலது கால்வாயை திறக்க முயன்றனர். இதைத் தடுக்க தெலுங்கானாப் பொலிஸார் முயன்றனர். இதனால் இரு தரப்பிற்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

இச்சம்பவம் பற்றி ஆந்திர மாநில நீர்ப்பாசனத்துறை மந்திரி அம்பதி ராம்பாபு தனது எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்ட பதிவில் "நாகார்ஜுனாசாகர் வலது கால்வாயில் இருந்து குடிநீர் தேவைக்காக கிருஷ்ணா நதியில் தண்ணீர் திறந்து விடுகிறோம்" எனத் தெரிவித்துள்ளது.

அணை பாதுகாப்புப்பணியில் ஈடுபட்டிருந்த தெலுங்கானா பொலிஸாருடன், ஆந்திரப் பொலிஸார் மோதலில் ஈடுபட்டனர். பின்னர், அணை பாதுகாப்பு நிர்வாகத்தை கைப்பற்றிய ஆந்திரப் பொலிஸார், அணையின் கேட் 5 மற்றும் 7 இல் உள்ள நீரை மணிக்கு சுமார் 5,000 கன அடி திறந்துவிட்டனர் என தெலுங்கானா தலைமைச் செயலாளர் சாந்தி குமாரி குற்றம் சாட்டினார்.



இதனைத் தொடர்ந்து அப்பகுதியில் பதற்றம் நிலவியதால் மத்திய அரசு ரிசர்வ் பொலிஸ் படையினர் சம்பவ இடத்திற்கு வந்தனர்.

மேலும் மோதலைத் தவிர்க்க, தெலுங்கானா மற்றும் ஆந்திரா மாநில உள்துறை செயலாளர்களுடன் வீடியோ மூலம் பேசிய மத்திய உள்துறை செயலாளர் அஜய் பல்லா இரு தரப்பையும் சமாதானப்படுத்தினார்.

இதையடுத்து, அணையை மத்திய ரிசர்வ் போலீஸ் படை மேற்பார்வையிடும். மேலும், ஒப்பந்தத்தின்படி இரு தரப்புக்கும் தண்ணீர் வருவதைக் கண்காணிக்கும் என்று கூறினார். இந்த திட்டத்திற்கு இரு மாநிலங்களும் சம்மதம் தெரிவித்துள்ளன. இந்த சம்பவம் தொடர்பாக ஆந்திரா பொலிஸார் மீது தெலுங்கானா நல்கொண்டா நகரில் பொலிஸார் 2 வழக்குகளைப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 2028 இல் சர்வதேச காலநிலை மாநாட்டை இந்தியாவில் நடத்தக் கோருகின்றார் மோடி

2028 இல் சர்வதேச காலநிலை உச்சி மாநாட்டை இந்தியாவில் நடத்தக் கோரியிருக்கின்றார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி.

சர்வதேச காலநிலை நடவடிக்கை உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்தியப் பிரதமர் மோடி இரண்டு நாள்கள் பயணமாக துபாய் சென்றுள்ளார். இந்த மாநாட்டில் பேசிய பிரதமர் மோடி, சர்வதேச அளவில் இந்தியாவின் கார்பன் வெளியேற்றம் மிகக் குறைந்த அளவிலேயே இருப்பதாக தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் அங்கு கூறியவை வருமாறு:-



"இந்தியாவின் மக்கள் தொகை உலக மக்கள் தொகையில் 17 சதவீதம் ஆகும். ஆனால் உலகளாவிய கார்பன் வெளியேற்றத்தைப் பொறுத்தவரை இந்தியாவின் கார்பன் வெளியேற்றம் 4 சதவீதமாக மட்டுமே உள்ளது.

மக்கள்தொகை குறைவாக உள்ள மற்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது இந்தியாவின் கார்பன் வெளியேற்றம் மிகவும் குறைவு. காலநிலை சார்ந்த இலக்குகளை அடைவதில் இந்தியா வேகமாக முன்னேறி வருகிறது.

காலநிலை மாற்றம் குறித்த ஐ.நா.வின் கட்டமைப்புகளை நிறைவேற்ற இந்தியா உறுதி பூண்டுள்ளது. எனவே, 2028இல் சர்வதேச காலநிலை உச்சி மாநாட்டை இந்தியாவில் நடத்துவதற்கு முன்மொழிகிறேன்."

- இவ்வாறு பிரதமர் மோடி தெரிவித்தார்.

# படகு தீப்பற்றிக் கடலில் மூழ்கியது 11 மீனவர்கள் காப்பாற்றப்பட்டனர்

நடுக்கடலுக்கு சென்ற ஆந்திர மீனவர்கள் சமையல் செய்வதற்காக காஸ் அடுப்பை பற்ற வைத்தனர். அப்போது தீ பரவி படகு முழுவதும் தீயில் கருகி கடலில் மூழ்கியது.

ஆந்திர மாநிலம் காக்கிநாடா அருகே நேற்று மீனவர்கள் 11 பேர் கடலில் மீன் பிடிக்க சென்றனர்.

நடுக்கடலுக்கு சென்ற மீனவர்கள் சமையல் செய்வதற்காக காஸ் அடுப்பை பற்ற வைத்தனர். அப்போது சிலிண்டரில் இருந்து காஸ் கசிவு ஏற்பட்டு திடீரென படகு தீப்பிடித்து எரிய ஆரம்பித்தது.



இதுகுறித்து மீனவர்கள் கடலோர காவல் படையினருக்கு தகவல் தெரிவித்தனர். கடலோர காவல் படையினர் விரைந்து வந்து படகில் இருந்த 11 மீனவர்களையும் பத்திரமாக மீட்டனர்.

பின்னர் படகு முழுவதும் தீயில் கருகி கடலில் மூழ்கியது. படகில் ஏற்பட்ட தீ விபத்தில் இருந்து 11 மீனவர்கள் பத்திரமாக மீட்கப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

# போர் நிறுத்தம் முடிந்ததும் இஸ்ரேல் விடிய விடிய குண்டுவீச்சுத் தாக்குதல்

## 180 பாலஸ்தீனியர்கள் பலி; 589 பேர் காயம்





இஸ்ரேல் - ஹமாஸ் அமைப்பு மீதான போர் நிறுத்தம் நேற்று முடிவடைந்ததை அடுத்து காசா மீது இஸ்ரேல் தனது போர்த் தாக்குதலை மீண்டும் தீவிரப்படுத்தியது. தெற்கு காசாவில் இஸ்ரேல் போர் விமானங்கள் இரவிரவாகக் குண்டுகளை வீசின.

அதே போல காசாவின் மற்றப் பகுதிகளிலும் தாக்குதல் நடத்தப்பட்டன. குண்டு வீச்சால் பல இடங்களில் கடும் புகை எழும்பின. காசா மீது இஸ்ரேல் விடிய, விடிய தாக்குதல் நடத்தியது

இஸ்ரேல்-காசாவின் ஹமாஸ் அமைப்பினர் இடையேயான போர் கடந்த அக்டோபர் 7-ந்தேதி தொடங்கியது. இதில் காசா மீது இஸ்ரேல் மும்முனை தாக்குதல் நடத்தியதில் 14,500-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இஸ்ரேலின் வான்வழித் தாக்குதலால் காசாவில் ஆயிரக்கணக்கான கட்டடங்கள் இடிந்து தரை மட்டாகின. இதற்கிடையே ஹமாஸ் அமைப்பினரிடம் இஸ்ரேல் பிணைக் கைதிகளை விடுவிப்பதற்கான பேச்சுவார்த்தை மூலம் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது.

கடந்த 24 ஆம் திகதி தொடங்கிய போர் நிறுத்தம் 7 நாள்கள் நீடித்தது. இதில் 83 இஸ்ரேல் பிணைக் கைதிகள், 24 வெளிநாட்டினரை ஹமாஸ் விடுத்தது. அதே போல் இஸ்ரேல் சிறைகளில் இருந்து 240 பாலஸ்தீனியர்களை இஸ்ரேல் அரசு விடுதலை செய்தது.

போர் நிறுத்தம் நேற்று முடிவுக்கு வந்தது. போர் நிறுத்தத்தை மேலும் நீடிக்க கத்தார் நாடு முயற்சித்தது. ஆனால் உடன்பாடு ஏற்படவில்லை.

இதையடுத்து காசா மீது இஸ்ரேல் தனது போர் தாக்குதலை மீண்டும் தீவிரப்படுத்தியது. தெற்கு காசாவில் இஸ்ரேல் போர் விமானங்கள் குண்டுகளை வீசின.

அதே போல காசாவின் மற்ற பகுதிகளிலும் தாக்குதல் நடத்தப்பட்டன. குண்டு வீச்சால் பல இடங்களில் கடும் புகை எழும்பின. காசா மீது இஸ்ரேல் விடிய, விடிய தாக்குதல் நடத்தியது. தெற்கு காசாவில் உள்ள கான்யூனுசின் கிழக்கு பகுதிகளில் சரமாரியாக குண்டுகள் வீசப்பட்டன.

போர் நிறுத்தத்துக்கு பிறகு முதல் நாள் தாக்குதலில் 180 பாலஸ்தீனியர்கள் பலியானார்கள்.

இது தொடர்பாக காசாவின் சுகாதார அமைச்சகம் கூறும்போது, நேற்று காலை இஸ்ரேல் தனது தாக்குதலை மீண்டும் தொடங்கிய 2 மணி நேரத்தில் 180-க்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர். 589 பேர் காயம் அடைந்துள்ளனர்.

காசா மீதான தாக்குதலை இஸ்ரேல் இன்னும் தீவிரப்படுத்தியுள்ளது. இதனால் காசா மக்கள் உயிரை கையில் பிடித்தப்படி தவிப்புக்குள்ளாகி இருக்கிறார்கள்.

காசாவில் உள்ள பாலஸ்தீனியர்கள் நோய், மரணம் மற்றும் அழிவு ஆகியவற்றை எதிர்கொண்டு இருக்கின்றனர் என ஐ.நா. கவலை தெரிவித்துள்ளது.

இதற்கிடையே ஹமாஸ் அமைப்பினரிடம் 126 இஸ்ரேலியர்கள், தாய்லாந்தை சேர்ந்த 8 பேர், நோபளம், தான்சானியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளை சேர்ந்த தலா ஒருவர் என 137 பேர் பிணைக் கைதிகளாக இன்னும் உள்ளனர் என்று இஸ்ரேல் தெரிவித்து உள்ளது.

# தலா எட்டுப் பிள்ளைகளைப் பெறுங்கள் ரஷ்யப் பெண்களிடம் புடின் வலியுறுத்து!



ரஷ்யாவில் கடுமையான தொழிலாளர் பற்றாக்குறை ஏற்பட்டு உள்ளது.

இந்நிலையில் ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் உலக ரஷ்ய மக்கள் பேரவைக் கூட்டம் நடைபெற்றது. இதில் அந்த நாட்டின் அதிபர் விளாடிமிர் புடின் காணொலிக்காட்சி மூலம் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறுகையில் -

ரஷ்யாவின் பிறப்பு விகிதம் கடந்த 1991 ஆம் ஆண்டில் இருந்து வெகுவாக குறைந்து வருகிறது. முன்பு ஒவ்வொரு குடும்பத்திலும் 4-க்கும் மேற்பட்ட குழந்தைகள் இருந்தனர். ஆனால் தற்போதைய நவீன உலகில் அந்த அளவு சுருங்கியது. மேலும் உக்ரைன் - ரஷ்யா இடையேயான போர் 21 மாதங்களாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதனால் ரஷ்யாவில் கடுமையான தொழிலாளர் பற்றாக்குறை ஏற்பட்டு உள்ளது. எனவே நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தொழிலாளர் பற்றாக்குறையை சரி செய்வதற்காக நாட்டின் மக்கள் தொகையை அதிகரிப்பதே அரசாங்கத்தின் இலக்கு ஆகும். எனவே இனிவரும் காலங்களில் ரஷ்யாவில் உள்ள பெண்கள் ஒவ்வொருவரும் குறைந்தபட்சம் 8 குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். - என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதன்மூலம் நாட்டின் 1,000 ஆண்டு கால பாரம்பரியத்தை பாதுகாக்க முடியும் எனவும் அவர் கூறினார். உக்ரைனுடனான போரில் இதுவரை சுமார் 3 லட்சம் ரஷ்யர்கள் உயிரிழந்தனர் எனக் கூறப்படுகிறது. இந்த பின்னணியில்தான் புடின் இவ்வாறு முடிவு எடுத்திருக்கிறார் என அங்குள்ள ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்தாண்டு தொடக்கத்தில் வெளியான கணக்கெடுப்பின்படி ரஷ்யாவின் மக்கள் தொகை 14 கோடியாக இருந்தது. அது 1999இல் புதின் முதல்முறையாக அதிபர் பதவியை ஏற்கும் முன்பு இருந்த மக்கள் தொகையை விடக் குறைவு என்பது குறிப்பிடத்தக்கது.

ரஷ்ய அதிபர் புதின் சமீபத்தில் கலந்து கொண்ட நிகழ்ச்சியில் பேசிய பேச்சு இணையத்தில் டிரெண்டாகி வருகிறது.